இலவச காலாண்டு சமய இதழ்

# அகர தீபம்

www.akaram.eu

14.02.2024 - 13.04.2024

FREE MAGAZINE



## தில்லையம்பலப் பிள்ளையார் கோவில்

## கேது தோஷம், நாக தோஷம் போக்கும் சதுர்த்தி விரதம்!

## ஈழத்தில் தில்லைக் கூத்தனின் திருநடனம் தொடங்கி விட்டதோ?

10 ஆம் ஆண்டில்

மாலை : 09 மலர் : 03

திருவள்ளுவர் ஆண்டு 2055

# நுழைவாயில்..


**அகரதீபம்**
**ஆன்மீக அன்பர்களுக்கு**
**வணக்கம்.**

இந்த இதழில் ஆன்மீகம் என்றால், அதனை இந்த உலகம் எப்படிப் பார்க்கிறது? அதனை நாம் எமது மதத்திலும், கலாசாரத்திலும் எப்படிப் புரிந்து, எமது நம்பிக்கையை வளர்த்து வருகிறோம் என்பதை மறு பார்வைக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயத்தை, உலக அரசுகள் நடத்தும் போர் முறைகளுடன் ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டியக் கட்டாயத்தைக் கடந்த சில மாதங்களாக பல உயிர்கள் உடைமைகளை அழித்தும், முடிவைக் காண முடியாத அநுமாரின் வால் போல நீண்டு கொண்டே செல்லும். உக்கிரெயின் உருசியப் போர் பற்றி நாம் மிக ஆழமாக யோசித்தால், எமது ஆன்மீக அறிவும், உலக நாடுகள் பார்க்கும் மதமும், மத நம்பிக்கைகளும் ஆன்மீகப் புரிதலில் பாரிய முரண்பாடுகளைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

நாம் நமது இனஅழிப்பு தொடர்பாக எமது ஆன்மீகத்தையும், கடவுள் நம்பிக்கையையும் மீள் பார்வைக்கு உட்படுத்தி, உலகோடு ஒட்ட வாழ்வதும் ஆன்மீகத்தின் கட்டாய தேவை என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். அதன்படியே எமது வாழ்வியல் ஆன்மீகத்தை உலக அரசியல் நீரோட்டத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. அத்தகைய முயற்சியில் அறிவோம். ஆன்மீகத் தொடர் இந்த இதழில் அறிமுகமாகிறது. வாசகர் தமது கருத்துகளைத் தந்தால், நம் இனத்தின் ஆன்மீக வாழ்வைத் திட்டமிட்டு, உலக அரசியலுடன் பயணிக்க, நம் இனத்தை வழிநடத்தலாம். எனவே, உங்களின் கருத்தை வழங்கிச் சிறப்பிக்கத் தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்த இதழில் சந்திக்கும் வரை, எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் பணிந்து எல்லாரும் இன்புற்றிருக்க விடை பெறும்,

**ஆசிரியர், அகர தீபம்.**



# ஆஞ்சநேயருக்கு வடைமாலை



ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தி வழிபட்டால் ஏராளமான பலன்கள் உண்டு என்று ஆன்மீகவாதிகள் தெரிவித்துள்ளனர். ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தி வழிபட்டால் சனி, ராகு ஆகியோர்களின் இடையூறுகளில் இருந்து விடுபடலாம் என்றும், அதனால்தான் ஆஞ்சநேயருக்கு வடைமாலையைப் பக்தர்கள் சாத்துகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக நாமக்கலில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு வடைமாலை சாத்தினால், எண்ணியது நிறைவேறும் என்றும், சனி, ராகு பகவானின் இடையூறுகள் நெருங்காது என்றும் கூறப்படுகிறது.

சனி மற்றும் ராகுவால் ஏற்படும் இடையூறுகள் மனிதனை மிகப்பெரிய அளவில் ஆட்டி வைக்கும் நிலையில், அந்த நேரத்தில் நாமக்கல் சென்று ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தினால் மனதில் நிம்மதி ஏற்படும் என்று கூறப்படுகிறது.



அகர தீபம்

மாலை : 08 மலர் : 02

தலைமை
த. இரவீந்திரன்

ஆசிரியர்
ஆதவன்

ஆசிரியர் குழு
வியாசன்

வடிவமைப்பு
ஈழமயூரன்

ஒப்பு நோக்குனர்
திரு.செ. அமுதவாணன்

தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany.

00 49 176 47 11 87 11

Email : akaratheepam@akaram.eu

www.akaram.eu

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY,
HOLLAND, SWEDEN, ITALY, CANADA

© ETU e.V.2014 All rights reserved



# கேது தோஷம், நாக தோஷம் போக்கும் சதுர்த்தி விரதம்!

தெய்வ வழிபாட்டில் விநாயகர் வழிபாடு என்பது முதன்மையானதும், தெய்வீகம் பொருந்தியதும் ஆகும். சதுர்த்தி நாளில் விநாயகரை வேண்டி விரதம் இருப்பது பல நன்மைகளை அளிக்கிறது.

சந்திரனின் சுழற்சியைக் கணக்கிட்டு வரும் திதி, சதுர்த்தி எனப்படுகிறது. பௌர்ணமி, அமாவாசைக்கு பிறகு 4ஆவது நாளில் சதுர்த்தி நாள் வரும். இது மூல முதற்கடவுளான விநாயகருக்கு உகந்த நாள். எந்த ஒரு செயலையும் விநாயகரை வேண்டித் தொடங்கினால், தொட்டது துலங்கும். கோவில்களிலேயே முதல் கடவுளாக முன்பே காட்சி தருபவர் விநாயகர்.

நவக்கிரகங்களின் உஷ்ண பார்வையிலிருந்து காக்கும் சக்தி வாய்ந்தவர் விநாயகர். விநாயகருக்கு உகந்த சதுர்த்தி நாளில் விரதம் இருந்து, அருகே உள்ள விநாயகர் கோவிலுக்குச் சென்று வழிபடுவது சிறந்த பலனை தரும். முக்கியமாக கேது தோஷம், நாக தோஷம் உள்ளவர்கள் சதுர்த்தி விரதம் இருந்து விநாயகரை வேண்டி வந்தால், தோஷ ரேகைகளில் இருந்து காத்து அருள்புரிவார்.



விநாயகர் எளிமையான தெய்வம் என்பதால், விரதத்தில் எந்த ஆடம்பரமும் தேவையில்லை. காலையில் நீராடி, விநாயகர் கோவிலுக்குச் சென்று பிரகாரத்தை 11 முறை சுற்றிவந்து வழிபடலாம். அருகம்புல், வெள்ளெருக்கு மாலைகள் விநாயகருக்கு உகந்தவை. அவற்றை விநாயகருக்கு அணிவிக்கலாம்.

நிவேத்தியமாக விநாயகருக்குப் பிடித்த மோதகம், அவல் பொரி, கொழுக்கட்டை, சர்க்கரை பொங்கல், கொண்டைக் கடலை இவற்றில் ஏதாவது ஒன்றை படைக்கலாம்.

# திருவாசகம் படித்தால் அடுத்த பிறவியிலும் நன்மை கிடைக்கும்..!




‘திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’ என்று கூறப்படும் நிலையில், இந்த நூலைப் படிப்பவர்கள் இந்த ஜென்மத்தில் மட்டுமின்றி, அடுத்தப் பிறவியிலும் பலனை பெறுவார்கள் என்று ஆன்மீகவாதிகள் தெரிவித்துள்ளனர்.

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் என்பது, இந்துக்களின் புனித நூலாகக் கருதப்படுகிறது. இந்த நூலை தினமும் படித்து வந்தால், இந்தப் பிறவி மட்டுமின்றி, அடுத்தப் பிறவியிலும் பலன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. இந்த நூலில் உள்ள சில பாடல்கள் மாணவர்களுக்குப் பாடநூலாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. படிக்கப் படிக்க மனதை உருக வைக்கும் அளவுக்கு அதில் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளும், இறைவனே நேரில் வந்து நமக்கு இந்தப் பாடலைப் பாட சொல்லிக் கொடுப்பது போன்று இருக்கும் என்றும், இந்தப் புத்தகத்தைப் படித்தவர்கள் கூறுவது உண்டு.

எனவே, தினந்தோறும் காலை, மாலை என இரு வேளைகளிலும் திருவாசகம் நூலைப் படித்து, இந்தப் பிறவியில் மட்டுமின்றி, அடுத்த பிறவியிலும் பலனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# விரதம் இருந்தால் அடுத்த பிறவி இல்லை..!



ஒவ்வொரு மாதமும் வரும் கார்த்திகை தினத்தன்று தீபம் ஏற்றி, விரதம் இருந்தால் மறுபிறவி இல்லை என்று நம்பப்படுகிறது.

கார்த்திகை தினத்தன்று அதிகாலையில் நீராடி, இறைவனை வழிபட்டு, நீர் மட்டும் அருந்தி, விரதம் இருக்க வேண்டும். இரவு நேரத்தில் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்ய வேண்டும். மறுநாள் காலையில் குளித்து முடித்து, பானம் அருந்தி, விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு ஒவ்வொரு கார்த்திகை தினத்திலும் விரதம் இருக்க வேண்டும். 12 ஆண்டுகள் இந்த விரதத்தை மேற்கொண்டால், அடுத்த பிறவி இருக்காது என்றும், வேண்டிய வரங்கள் கிடைக்கும் என்றும் ஐதீகமாக கூறப்படுகிறது. விரதம் இருப்பது என்பது நமது துன்பங்களை போக்கும் என்றும், முற்பிறவியில் செய்த தீவினைகள் களையும் என்றும் நம்பப்படுகிறது.

# ஈழத்தில் தில்லைக் கூத்தனின் திருநடனம் தொடங்கி விட்டதோ?

**சிவனடியான்**



மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரம் தொடங்கும் நாளில், தமிழர்களின் தனிப் பெரும் இறைவனான தில்லைக் கூத்தனின் ஊழித் திரு நடனக் காட்சியை, உலகில் வாழும் சைவத் தமிழ் மக்கள் அனைவரும் அதிகாலையில் பக்தியுடன் வழிபடுவது, பல்லாயிரம் வருடங்களாக ஆண்டுதோறும் இடம் பெறும் சமயப் பெருவிழாவாகும். இதனை ஆருத்திரா தரிசனம் என வடமொழியல் அழைப்பர்.

சிவனின் இந்தத் திருநடனத்தைப் பிரபஞ்சம் எனப்படும் அண்ட சரா சரங்களைப் படைத்தும், காத்தும், மறைத்தும் ஆன்மாக்களுக்குச் சிவ பதம் அளித்தல் என சைவாகமம் கூறும். சிவனின் படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் எனும் ஐந்து தொழில்களையும் ஆடல் வடிவமாக சிவன் காட்சி தருவதே நடராசப் பெருமானின் இந்நத் திருநடனக் காட்சி.

எந்த மதத்தவராயினும், இனத்தராயினும், உயிர் இனமாயினும் சிவனின் இந்த ஐந்தொழில்களும் இந்தப் பிரபஞ்சத்தின் முதலாகவும், முடிவாகவும் சிவனின் திரு நடனம் உள்ளது. அதனால் தான் சித்தர்கள் 'எல்லாம் சிவன் செயல்' என்றும், 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்றும் பாடினார்கள்.

அதைக் குறிக்கவே திருவிளையாடல் படத்தில், "பாட்டும் நானே! பாவமும் நானே!! பாடும் உனை நான் பாட வைத்தேனே" என்றும், "கூட்டும் இசையும், கூத்தின் முறையும் காட்டும் என்னிடம் கதை சொல்ல வந்தாயோ.." எனச் சிவன் பானபட்டரை நோக்கிப் பாடுவதாக அந்தப் பாடலை கண்ணதாசன் எழுதியிருந்தார்.

புத்தன் பிறந்த மண்ணில், புத்த மதம் அழிந்து விட்டது. ஆனால், கள்ளத் தோணிகளில் வந்து குடியேறியத் தெலுங்கனும், பிற இனத்தவரும் நடத்தும் அட்டகாசம்

பொறுக்க முடியாத தென் நாடுடைய எங்கள் சிவன், தன் ஊழிக் கூத்தைத் தொடங்கி விட்டது போல, ஆங்காங்கே தில்லை நாதனின் திரு நடனக் காட்சி தரும் சிலைகளும் தோற்றம் பெறுவதைக் காண முடிகிறது.

இதுவே இன்றைய விஞ்ஞானிகள் 'பிக் பாங்' அல்லது பிரபஞ்சப் பெரு வெடிப்பு என ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால் இன்று உலகின் அறிவியல் கூடுங்களின் முகப்பிலும், தில்லைக் கூத்தனின் திரு நடனச் சிலைகள் காட்சி தருகின்றன. பரத நாட்டியக் கலைஞர்களின் கலைக் கடவுளாக ஆடல் அரங்குகளையும், கலா ரசிகர்களின் வரவேற்பறைகளில் கலை அழகுச் சிலைகளாவும் பயன்படுத்தப்பட்ட நிலை மாறி, அறிவியலின் விளக்க வடிவமாகத் தில்லைக் கூத்தன் போற்றப் படுகிறார்.

அப்படியான ஒரு காட்சியை இங்கே அகரம் ஆருத்திரா தரிசன நினைவாகத் தருகிறது. சைவத் திருமேனிகளில் உருத்திர தாண்டவம் மிகச் சிறந்ததும், அழிவுகளின் தொடக்கமாகவும் பாராட்டப் படுகிறது.

சைவர்கள் தமது மனங்கள் என்னும் சிறிய வெளியாகிய சிற்றம்பலத்தில், சிவன் ஆடுவதால் உடல் இயங்குகிறது என்றும், பெரு வெளியான பேரம்பலத்தில் ஊழிக் கூத்தாக ஆடுவதால்,



அண்ட சராசரங்களும் அழிந்து, சூனியமாக ஒடுங்கி, சக்தியும் சிவனும் ஒன்றாகிப் பின்னர் பெரு வெடிப்பாக மீண்டும் கிரகங்கள், நட்சத்திரங்கள், வாயுக்கள் என நாம் காணும் உலகங்கள் தோற்றம் பெறுகின்றன.

ஆனால், சைவ மதத்தையும், சித்தாந்தத்தின் சிறப்புகள் உண்மைத் தன்மைகளை அறியாத அறிவிலிகளும், பிற மதத்தவரும் சிவனையும், சிவ நடனத்தின் உண்மைகளையும் இழிவுபடுத்தி வருவது கவலைக் குரியதாக இருந்தாலும், அதனால் அவர்கள் அடையப் போகும் தீய பலன்களில் இருத்தும் யாராலும் தப்பிக்க முடியாது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள, பௌத்த பிக்குகளின் சிவ நிந்தையும் நிச்சயம் இப்போதுள்ள பேரழிவுகளைக் காட்டிலும் பலமடங்கு பேரழிவுகளைச் சந்திக்க நேரிடும்.

# தில்லையம்பலப் பிள்ளையார் கோவில்



**யா**ழ்குடாநாட்டின் மத்தியில் (நடுச்சென்ரர்) குடிசனம் இல்லாத வயல்காடுகளுக்கு மத்தியில் உள்ள அற்புதமான ஒரு கோயில் தில்லையம்பலப் பிள்ளையார் கோவில். கிழக்கே மணல்காடு 'மினி' பாலைவனம். மேற்கே பொன்னாலைக்காடு. வடக்கே திக்கம் கடல். தெற்கே கச்சாய் வெளி. 1902ஆம் ஆண்டு, யாழ் குடாநாடு முழுவதும் மாட்டு வண்டிகளே வாகனமாக இருந்த காலத்தில் உருவான ஒரு தனியார் கோவில்தான் இது. பிராமணர் அல்லாத இக்கோயில், உரிமையாளர்களே இக்கோயில் அர்ச்சகர்களாகவும் உள்ளனர்.

வண்டில் பாதைகளே குடாநாட்டின் வீதிகளாக இருந்த அக்காலத்தில் மாடுகள், இக்கால பெற்றோலியம் போன்று அக்காலத்தின் பெருஞ்செல்வம். அக்கால குடாநாட்டு வண்டிப் பாதைகளின் மிகமுக்கிய சந்தியொன்றில் அமைந்த இக்கோயிலின் முக்கியத்தை அறிய, உங்களுக்கு மாடுகளின் மோப்ப சக்தி பற்றிய அறிவு முக்கியம். முதுவேனிற்கால ஆனி, ஆடி மாதங்களில் புற்தரைகளைத்தேடி மாடுகள் வெகுதூரம் செல்வதுண்டு. குடிசனமில்லாத களப்புக்கடலும், காடும் சூழ்ந்த



இப்பகுதியில் அபூர்வமான பாலைவன நீர்ச் சுனைகளைப் போல புற்கள் கடுங்கோடையிலும் இருக்கும். புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், கொக்குவில், கோப்பாய் ஆகிய தூர ஊர்களிலெல்லாம் மாடுகள் தொலைந்தபோது, அவைகளைத்தேடி வந்தவர்கள் இப்பகுதியில் அம்மாடுகளை மீட்டார்கள். அவர்கள் உருவாக்கிய தெய்வம்தான் தில்லையம்பல பிள்ளையார். இன்றைக்கும் புன்னாலைக்கட்டுவன் விவசாயிகள் இக்கோயில் திருவிழாவுக்கு மரக்கறி, பழங்கள் மனமுவந்து கொடுக்கிறார்கள். நூற்றாண்டுகால வழக்கம். பசு நெய்யில் பொரிக்கும் மோதகம் இக்கோயிலின் சிறப்பான பிரசாதம்.

உண்மையில் இது குடாநாட்டிலுள்ள மாடுகளுக்கான கோயில். பசுக்கள் பிரசவப் பிரச்சனைப் பட்டால் நேரும் கோயில்.

பலர் தம் பசுவின் முதற்பாலை படைக்கும் கோயில். கன்னிப்பசு நோய்வாய்ப்பட்டால், அதன் முதற்கன்று வளர்ந்ததும், அதனை கோயில் மாடாக்கி, தானம் செய்வார்கள். இக்கோயில் உருவான 1902இல் தான் இலங்கைக்கு முதல் மோட்டார் கார்





வந்தது. டிரைவர் ஓடும் கார் அது. ஆனால், அப்போதிருந்தே இக்கோயில் அர்ச்சகர்கள் ***Driverless*** காரை உபயோகித்தவர்கள். கரவெட்டியில் அர்ச்சகர் தன் மாட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தால் சரி, அவர் தூங்கி விடுவார். மாடுகள் இக்கோயிலில் வந்தடைந்ததும், தம் கழுத்தை ஆட்ட, அவற்றின் கழுத்து மணிச்சத்தம் கேட்டு, அர்ச்சகர் விழித்தெழுவார். தினமும் வீடு திரும்புவதும் அதே ***Driverless*** காரில்தான்.

இக்கோயிலின் நீண்டகால அர்ச்சகர் கந்தப்பு தன் தொண்ணூறு வயதில் இறந்தார். இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்த போது, தமது சென்றியில் இந்த மாட்டுவண்டியை அவர்கள் நிறுத்த சொன்னபோது, அது நிறுத்தாமல் தொடர்ந்து சென்றது. சிப்பாய்கள் ஓடிச்சென்று வண்டியிலேறி பார்த்தால், கந்தப்பர் நித்திரையிலிருப்பதைக் கண்டார்கள். பிற்காலத்தில் அவர்கள் இவ்வண்டியை மறிப்பதில்லை. இவ்வண்டி தமது சென்றியைக் கடந்து செல்லும்போது, தமது கடிகாரம் சரியாக ஓடுகிறதா? என்பதை கணிப்பார்கள்.

கந்தப்பு அர்ச்சகர் இறந்தபின், அவர் பேரன் அர்ச்சகராகி, இரண்டு



சில்லு பெற்றோல் மோட்டார் சைக்கிளில் வந்து பூசை செய்த சில மாதங்களிலேயே, அதே மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி, மோசம் போனான்.

கொக்குவிலான் அ.முத்துலிங்கம் இக்கோயிலைப் பற்றியொரு நல்ல சிறுகதை எழுதியுள்ளார். இத்தனைக்கும் கரவெட்டியான்களும், வரணியான்களும் ஜெருசலேமுக்குப் பலஸ்தீனியர்களும், இஸ்ரவேலியர்களும் அடிபடுகிறமாதிரி இக்கோயிலுக்கு பெரிய சண்டை போடுகிறார்கள். இக்கோயில் இப்போது கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில்தான் உள்ளது. ஆனால், கரவெட்டியிலிருந்து வெகுதூரத்திலுள்ள வரணி கரம்பானுக்கு மேற்காக, சில யார்கள் தூரத்திலேயே உள்ளது. பெயர் கரவெட்டி தில்லையம்பல பிள்ளையார் கோயில்.

போர்த்துக்கேசர் காலத்தில், அனைத்து இந்து / சைவ / பாரம்பரிய கோவில்களும் அழிக்கப்பட்டு, மக்கள் தம்மதத்தைத் தொடர அனுமதி மறுக்கப்பட்டனர். இக்கோயிலும் அக்காலத்தில் அழிக்கப்பட்ட ஒரு கோவிலாக இருக்கவேண்டும் என்று 'வரணி மரபுரிமைகள்' என்ற நூலாசிரியர் கார்த்திகேசு கமலநாதன் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடுகிற ஒரு மரபுவழிக்கதையின் படி, வரணி தம்பானுக்கு அருகிலுள்ள அம்பலவாணக் குளக்கரை என்னுமிடத்தில், திருவம்பலமுதலி என்கிற சைவபக்தர் போர்த்துக்கேசியர் காலத்தில் தொடர்ந்தும் சைவமதத்தை பின்பற்றினார். இதையறிந்து போர்த்துக்கேசர் இவரை, இப்போது கோயிலுள்ள காட்டுப்பகுதிக்குக் கொண்டு சென்று சிரச்சேதம் செய்து கொன்றபோது, அவர் "தில்லையம்பல பிள்ளையாரே" என்று கதறியபடி உயிரை விட்டாராம்.





அர்ச்சகர் கந்தப்பு

# தானம் தர்மம் வேறுபாடு



**நா**ம் நிறைய கேள்வி பட்டு இருப்போம். "நான் யார் வந்து, எதை கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுத்து விடுவேன். ஆனாலும், கடவுள் எனக்கு நல்லதே செய்வதில்லை" என்று குறைப்பட்டுக் கொள்வார்கள். உண்மையில் அவர்கள் செய்த தானமானது தர்மத்தில் சேராது. தானம் வேறு தருமம் வேறு. இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. தானத்திற்கும் தருமத்திற்கும் உள்ள வேறுபாட்டை கர்ணனின் கதை மூலமே நாம் தெரிந்துக்கொள்ளலாம்.

கர்ணன் தான தருமங்களில் சிறந்தவன் என்று தெரியும். அப்படி பட்ட கர்ணனை போரில் வீழ்த்துவது மிகக்கடினம் என்று கண்ணனே கூறியிருப்பார். ஆகவே, வீரரான, கர்ணனை விவேகத்தினாலேயே வீழ்த்த வைத்தான் கண்ணன். தர்ம யுத்தத்தில் கர்ணனது தேர் சக்கரத்தை சகதியில் புதைபடச்செய்து, அந்த நிமிடங்களை அர்ஜூனனுக்கு சாதகமாக்கிக் கொண்டு கர்ணனின் மேல் அம்புகளை எய்த வைத்தான் கண்ணன். இருப்பினும் கர்ணனின் உயிரானது அவன் உடலை விட்டு அகலவில்லை. காரணம் அறிந்த கண்ணன் ஒரு கிழவராக மாறு வேடத்தில் வந்து யாசகமாக கர்ணனிடம் அவனது புண்ணியங்களை பெற்று அவனுக்கு மோட்சத்தை அளித்தார்.

அச்சமயம் கர்ணனின் தந்தையான சூரிய பகவானுக்கு ஒரு சந்தேகம் வந்தது. தனது சந்தேகத்திற்கான கேள்வியை கண்ணனிடம் வைத்தார். "கிருஷ்ணரே.. எனது மகன் கர்ணன் தானத்தில் சிறந்தவன். அவனது தானத்தினால் பெற்ற புண்ணியங்களை நீங்கள் யாசகமாக பெற்றீர்கள். அதனால் அவனது புண்ணியங்கள் மேலும் தானே அதிகரிக்கவேண்டும்? அவ்வாறு இருக்கையில் அவன் புண்ணியங்கள் அவனை காப்பாற்றவில்லையே காரணம் என்ன?" என்றார்.

அதற்கு கிருஷ்ணன் அளித்த பதில் இது தான். "எவன் ஒருவன் யாசகம் கேட்பவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்கிறானோ, அந்த உதவியானது தானத்தில் சேரும். அவன் யாசகம் கோரும் முன் அவனது தேவை அறிந்து உதவி செய்தால் அது தர்மத்தில் சேரும். கர்ணன் தர்மம் செய்தவன். அதனால் நான் அவனிடம் புண்ணியத்தை யாசகமாகப் பெற்றேன். அவனளித்த இந்த தானம் தருமத்தில் சேராது" என்றார்.

ஒருவர் செய்யும் தருமம் மட்டுமே புண்ணியக் கணக்கில் சேரும். தானம் சேராது. ஒருவரின் புண்ணியத்தைக் கொண்டுதான் அவர்களின் வாழும் வாழ்க்கையானது இருக்கும்" என்றார்.



# பக்தியால் அரசனை வெற்றி கொண்ட சிவனாடியார்!

**ப**க்தி மார்க்கத்தை பெரும்பான்மையாகக் கொண்ட இந்த மரபில் பல அடியார்கள், பக்தியில் கரைந்து, முக்தி அடைந்திருப்பதாக பல தல வரலாறுகள் உள்ளன. இந்த அடியார்கள் தங்களின் சொந்த வாழ்க்கைக்காகவோ, சாப்பாட்டிற்காகவோ இறைவனை அழைத்ததில்லை. மாறாக முக்தி வேண்டி, பிறப்பறுக்க வேண்டி என மட்டும்தான் அவர்களின் வேண்டுகோள் இருக்கும். இது அப்படி ஒரு முதிர்ச்சியானதொரு மரபு கொண்ட கலாச்சாரம்.

அத்தகைய மனிதர்களை அடியார்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்றழைக்கப்பட்டு, அவர்களையும் இறைநிலைக்கு இணையாக வணங்கும் முறை வழக்கத்தில் உள்ளது. அப்படிப்பட்ட ஒரு நாயன்மார்தான் பூசலார். திருநின்றவூர் திருத்தலத்தில் வாழ்ந்து வந்த பூசலார், இளம் வயது முதல் இறைவன் மேல் பெரும் பக்தி கொண்டவராக இருந்தார். அன்றாடம் அவர் சென்று வணங்கும் லிங்கத் திருமேனிக்குத் திருக்கோயில் கட்ட, அவர் விரும்பினார். அது இயலாமல் போகவே, மனத்தில் கோயில் கட்ட முடிவு செய்தார் மறையவர் குலத்தில் தோன்றிய அந்த மகான்.

இதே காலத்தில், காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த பல்லவ மன்னர் ஒருவர், ஈசனுக்குக் கோயில் எழுப்பினார். மிகவும் பிரமாண்டமாக எழும்பிய அந்தக் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்ய நாள் குறித்தார். அன்றைய இரவு அவர் உறங்கும்போது, அவர் கனவில் இறைவன் தோன்றினார். "திருநின்றவூரில் வாழும் என் பக்தனான பூசலார் கட்டிய திருக்கோயிலில், நீ

குறித்த அதே நாளில் கும்பாபிஷேகம். அன்று நான் அங்கே குடிகொள்ளப் போகிறேன். எனவே, நீ கும்பாபிஷேகம் செய்ய, வேறு ஒரு நாள் குறித்துக் கொள்” என்று சொல்லி மறைந்தார்.

மன்னனுக்கோ ஆச்சரியம். ‘தான் எழுப்பியிருக்கும் கோயிலை விட, அந்தப் பூசலார் எழுப்பிய கோயில் எத்தனை உயர்ந்ததாக இருந்தால், ஈசன் அங்கு குடிகொள்ள முடிவு செய்வார். உடனே அந்த ஆலயத்தைக் காண வேண்டும்’ என்று விரும்பி, மறுநாள் திருநின்றவூருக்குக் கிளம்பினார்.

மன்னன் தன் பரிவாரங்களோடு அந்த ஊரை அடைந்தார். அங்கு கோயில்கள் எதுவும் புதிதாகக் கட்டப்பட்டு, கும்பாபிஷேகம் செய்யத் தயாராக இல்லை என்பதை விசாரித்து அறிந்தார். ஈசன் உச்சரித்த, ‘பூசலார்’ என்னும் திருப்பெயர் நினைவுக்கு வந்தது. பூசலார் இருப்பிடம் விசாரித்து, அங்கு சென்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். கனவில் நடந்தவற்றைச் சொல்லி, விளக்கம் கேட்டு நின்றார். பூசலாரின் சொல் கேட்டு வியந்த மன்னர், இறைவனின் மகத்துவத்தை அறிந்துகொண்டார். அவர் விரும்புவது பக்தர்களின் மனக் கோயிலையே என்று தெரிந்து கொண்டார்.

பூசலாரின் பக்தியை மெச்சி, அவரைப் பணிந்து வணங்கினார். அவர் உத்தரவைப் பெற்று, தன் ஊர் திரும்பிச் சென்றார். பூசலார் தன் மனக் கோயிலில் கும்பாபிஷேகம் செய்தார். தான் வாழும் காலம் வரை ஆகம விதி வழுவாமல் பூசை செய்தார்.

## சிவராத்திரி.. விரதம் இருக்கும் முறைகள்..!



அன்றைய தினம் விரதம் இருந்தால் ஏகப்பட்ட பயன் உண்டு என்று கூறப்படுகிறது. மகா சிவராத்திரி தினத்தன்று அதிகாலையில் எழுந்து நீராடி, சிவாலயம் சென்று விரதம் இருக்க வேண்டும். மேலும், அந்த விரதத்திற்கு எந்த விதமான பிரச்சினையும் வந்துவிடக்கூடாது என, எம்பெருமானை வேண்டிக் கொள்ள வேண்டும். பூஜைக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு, விரதம் முடிந்தவுடன் பொழுது சாயும் நேரத்தில் குளித்து, சுத்தமான ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும்.

நான்கு ஜாமங்களிலும் நான்கு சிவலிங்கங்களை மண்ணால் செய்து வழிபட வேண்டும். சிவ பூஜை செய்ய இயலாதவர்கள், நான்கு காலங்களிலும் கோவிலில் நடைபெறும் பூஜைகள் கலந்து கொண்டு தரிசனம் செய்யலாம். சிவராத்திரி தினத்தில் விரதம் இருந்தால், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும் என்றும், வீட்டில் தெய்வ கடாட்சம் பெருகும் என்றும், லட்சுமி அனுகிரகம் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

# அருகம்புல் மாலையும் விநாயகரும்

விநாயகருக்கு அருகம்புல் மாலை போடுவதைப் பக்தர்கள் வழக்கமாக இருக்கும் நிலையில், எதற்காக அருகம்புல் போடுவது? என்பது குறித்த புராண கதை ஒன்று உள்ளது.



அனலாசுவரன் என்ற அரக்கன், தேவர்களை மிகவும் துன்புறுத்தி வந்தான். தன்னை எதிர்ப்பவர்களை அனலாய் தவித்து விடும் நிலையில், பிரம்மா தேவேந்திரன் ஆகியோர் சிவன், பார்வதியைச் சந்தித்து முறையிட்டனர். உடனே சிவன் விநாயகரை அழைத்து, அந்த அரக்கனை அழித்துவிட்டு வரும்படி கூற, விநாயகர் தனது படையுடன் கிளம்பினார். ஆனால், அவரால் அரக்கனை வெல்ல முடியவில்லை. ஒரு கட்டத்தில் கோபமடைந்த விநாயகர், அந்த அரக்கனை அப்படியே விழுங்கி விட்டார். வயிற்றுக்குள் சென்ற அரக்கன், அங்கு வெப்பத்தை வெளிப்படுத்த, விநாயகருக்குத் தாங்க முடியாத வெப்பம் ஏற்பட்டது.

இந்த நிலையில்தான் ஒரு முனிவர் அருகம்புல்லை கொண்டு, விநாயகரின் தலைமேல் வைத்த அடுத்த நிமிஷமே, அனலாசுரன் விநாயகர் வயிற்றுக்குள் ஜீரணம் ஆகிவிட்டான். அது முதல் தன்னை தரிசிக்க வருபவர்கள் அருகம்புல் கொண்டு அர்ச்சனை செய்ய வேண்டும் என்று விநாயகர் கட்டளையிட்டார். இதனால் தான் இன்றும் விநாயகருக்கு அருகம்புல் சாத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




# தைப்பூசம்



குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பார்கள். அது போல முருகன் கோவில்கள் அனைத்திலும் மிக முக்கியமான விழாவாக தைப்பூசம் கொண்டாடப்படும்.

முருகப் பெருமானுக்குரிய முக்கிய வேண்டுதல்களில் ஒன்று காவடி எடுப்பது. இந்த காவடி எடுக்கும் முறை தோன்றிய தலம் பழனி மலை. இந்த பழனி தலத்தில் மிக முக்கிய விழாவாக கொண்டாடப்படுவது தைப்பூசம். இந்த தைப்பூசத்திற்கும் பழனி மலை தலத்திற்கும் மிகப் பெரிய தொடர்பு உள்ளது.

சிவ பெருமான், நடராஜராக தனித்து ஆனந்த தாண்டவம் ஆடிய நாள், மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை. இந்த நடனத்தை பிரம்மா, விஷ்ணு, பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகியோருக்காக சிதம்பரத்தில் சிவ பெருமான் அரங்கேற்றினார். இந்த நடனத்தை பார்வதி தேவியும் ரசித்துக் கொண்டிருந்தார். சிவ பெருமானின் ஆனந்த தாண்டவத்தை கண்ட சிவகாமிக்கும் அதே போன்று தாண்டவமாட ஆசை வந்தது.

சிவ பெருமானைப் போன்று அன்னையின் நடனத்தையும் காண பிரம்மா, விஷ்ணு உள்ளிட்டோர் ஆர்வம் கொண்டனர். முனிவர்கள், தேவர்கள் உள்ளிட்டோரின் ஆசையையும் நிறைவேற்ற எண்ணிய அம்பிகை ஆனந்த தாண்டவம் நிகழ்த்திய நாள் தைப்பூச திருநாளாகும். சிவ பெருமான் ஆனந்த தாண்டவம் நிகழ்த்திய நாள் திருவாதிரை என கொண்டாடப்படுவதை போல், அம்பாள் நடனமாடிய திருநாள் தைப்பூசம் என கொண்டாடப்பட்டது. அதனால் இந்த நாள் அம்பிகை வழிபாட்டிற்குரிய நாளாக மாறியது. இந்த நாள் முருகனுக்குரிய திருநாளாக மாறிய தலம் பழனிதான்.



பாகம்-23



# அறிவோம் ஆன்மீகம்

மக்கள் சேவையே மகேசன் சேவை. சிவ தொண்டர்களுக்குச் சேவை செய்தால், சிவனுக்கே செய்த பயன் கிடைக்கும் என்கின்றன சைவாகம நூல்களும், புராணங்களும். பகவத் கீதையில் கண்ணன் தானே எல்லாவற்றிலும் எல்லாமாகவும் தானே இருப்பதாகச் சொன்னான்.

சிவச் சொத்து அவச் (பாவச்) சொத்து என்பது, சைவர்களின் வாழ்வியல் தத்துவம். இக்காலத்தில் மனிதன் பேராசை வசப்பட்டு, செய்யத் தகாத பாவங்களை எல்லாம் செய்கிறான்.

பணம் இருந்தால் எல்லாம் கிடைத்து விடும். சுகபோக வாழ்வு வாழலாம் என்கிற தப்பான முடிவுகளை எடுத்து பொய், களவு, கள், காமம், கொலை எனப்படும் பஞ்சமா பாவங்களையும் செய்கிறான்.

செய்த செயல் நினைவு எல்லாம் எதிர் வினையாகச் சுவற்றில் எறிந்த பந்தைப் போல, அவனிடமே திரும்பி, பாவ புண்ணிய மூடைகளாகப் பல பிறவிகளையும், அவற்றால் ஏற்படும் பாவ புண்ணியங்களும் அவனை மீள முடியாத பிறவிக் கடலுக்குள் ஆழ்த்தி விடுகின்றன.

இவற்றில் இருந்து விடுபட வேண்டும் என்றால் சிவ பக்தியும், அன்பும், எல்லா உயிர்கள் மீதும் கருணை காட்டிப் பாதுகாக்கும் குணம் வேண்டும். ஆனால், இவை அனைத்தும் இன்றைய உலகில் காணாமல் போய் விட்டன.

வெளி நாட்டவரின் படை எடுப்புகளால் எம் இனம் மிலேச்சர்களின் கலை, கலாச்சார ஊடுருவலால் நாம் எல்லா நற் சிந்தனைகளையும், நற்பண்பு மற்றும் ஒழுக்க நெறிகளை மறந்தவராய், கடவுள் நம்பிக்கை அற்ற கயவர்களாய்,

கடவுள் இல்லை, அதனால் எம்மையாரும் தண்டிக்க முடியாது என்கிற வெறியில், எல்லா பாவங்களையும் செய்து, பிறரையும் அவ்வாறு செய்யத் தூண்டும் பாவச் செயல்களைச் செய்யவும் காரண கர்த்தாக்கள் ஆகி விடுகிறோம்.

இன்று எம்மினம் மிகப் பெரும் அழிவுகளையும், துயரங்களையும் அனுபவிக்கும் நரக வாழ்வில் அவதி உறும் நிலையை அடையவும், நம்பிக்கை, நாணயம் கடுகளவும் இல்லாத மேலை நாட்டார்களின் கூலிகளாக மாறிவிட்ட அயோக்கியர்களை, எமது இனத்தின் தலைவர்களாகக் கொண்டு விட்டதால் ஏற்பட்ட கொடுமை அல்லாமல், தலைவிதி என்றும், கடவுள் அளித்த தண்டனை என்றும், எம்மை நாமே பாவம் செய்தவர்களாக சமாதானப் படுத்துவதால் ஏற்பட்ட விளைவுகளே அல்லாமல் வேறொன்றும் இல்லை.

இவற்றுக்குக் கடவுளையும், தலை விதியையும் காரணமாகச் சொல்லும் மடமைத்தனத்தை நாம் முதலில் வேரோடு புடுங்கி எறிய வேண்டும்.

அரசியல் வேறு, ஆன்மீகம் வேறு. இந்தப் புரிதல் ஏற்பட்டால் மட்டுமே நாம் இந்த உலகில் சம உரிமையும், சம வாய்ப்பும், உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் பெற்று எந்த இனத்தின் அடிமையாகவும் தயவிலும் வாழாத சுதந்திரம் பெற்ற மனிதராக வாழமுடியும்.

இப்படித்தான் வாழ்வோம் என்கிற இலட்சியம்தான் எமது ஆன்மிகமாக நாம் கொள்ள வேண்டும்.

# கெட்ட சக்திகளை விரட்ட தீபம் ஏற்றுங்கள்..!



நமது முன்னோர்கள் தினந்தோறும் வீட்டில் விளக்கு ஏற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால் இன்றைய தலைமுறை எவரும் வீட்டில் விளக்கு என்பதே இல்லாமல் உள்ளது. இந்த நிலையில் தீபம் ஏற்றி, இறை வழிபாடு செய்தால், அனைத்து கெட்ட சக்திகளும் வீட்டிலிருந்து விரட்டப்படும் என்று முன்னோர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ‘நந்தா விளக்கு’ என்பது ஒரு சக்தி வாய்ந்த விளக்கு என்றும், அந்த விளக்கு அணையாமல் வீட்டிலில் எரிந்து கொண்டிருந்தால், அனைத்து கெட்ட சக்திகளும் நெருங்காது என்றும் கூறப்படுகிறது. மேலும், நல்ல தேவதைகள் வீடு தேடி வர வேண்டும் என்றால், இந்த அணையா விளக்கை ஏற்ற வேண்டும் என்றும் கூறப்படுகிறது. நெய் அல்லது நல்லெண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றலாம் என்றும் முன்னோர்கள் தெரிவித்துள்ளனர்.

# மாசி மாதச் சிறப்புகள்



எல்லா தெய்வங்களுக்கும் சிறப்பு மிக்க மாதம் என்று போற்றப்படுகிறது மாசி மாதம். திருமால், மகாவிஷ்ணுவாக அவதாரம் எடுத்தது மாசி மக நட்சத்திரத் திருநாளில்தான் என்கிறது புராணம். மாசி மாதத்தில் வருகிற சங்கடஹர சதுர்த்தி மிக மிக விசேஷம் ஆழ்வார்களில் ஒருவரான, குலசேகர ஆழ்வார் மாசி மாதம் புனர்பூச நட்சத்திர நாளில்தான் அவதரித்தார்.

மாசி மாதம் என்பது மன வலிமை தரக்கூடிய மாதம் மகத்துவம் நிறைந்த மாதம். இம் மாதத்தை மாங்கல்ய மாதம் என்றும் கூறுவர். சிவத்தோடு சக்தி இணைந்து முழுமை பெறுவதால் தன் கணவனின் நலனுக்காக பெண்கள் இந்த மாசி மாதத்தில் தாலிக் கயிற்றினை புதிதாக மாற்றிக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இந்தியாவில் உள்ள அனைத்து புண்ணியத் தீர்த்தங்களிலும், சமுத்திரக் கரையிலும், புனித நதிகளிலும் மாசி மாதத்தில் அமிர்தம் நிறைந்திருப்பதாக புராணங்கள் கூறுகின்றன. இதன் காரணமாகவே இந்த மாதத்தில் நீர்நிலைகளில் புனித நீராடுவதை இந்துக்கள் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

மாசி மாதத்தன்றுதான் பார்வதிதேவி காளிந்தி நதியில், தாமரை மலரில் வலம்புரிச் சங்காகத் தோன்றினாள் என்கிறது புராணம். சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் ஏராளம். இப்படியான திருவிளையாடல்கள் பலவற்றை நிகழ்த்தியது மாசி மாதத்தில்தான். எனவே மாசி மாதம்



முழுவதுமே சிவ வழிபாட்டுக்கு உரிய மாதம் என்று போற்றுகிறார்கள் பக்தர்கள்.

அன்னதானத்தின் பெருமைகளை உணர்த்துவது மாசி மகம் தான். எனவே, மாசி மாதத்தில் நம்மால் முடிந்த அளவுக்கு அன்னதானம் செய்வது விசேஷம். அது மும்மடங்கு பலன்களைத் தரும்.




அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையா என்கிறோம். மாசி மாத பூச நட்சத்திர தினத்தில்தான் முருகப் பெருமான் சுவாமிமலையில் தன் தந்தை சிவபெருமானுக்கு உபதேசம் செய்தார். மாதந்தோறும் வருகிற ஏகாதசியே சிறப்புமிக்கதுதான். ஆனால் மாசி மாதத்தில் வருகிற ஏகாதசியில் விரதம் இருப்பது மகாபுண்ணியம். உயர் படிப்பு படிக்க விரும்புபவர்கள் ஆராய்ச்சி செய்ய விரும்புபவர்கள் மாசிமக நாளில் அவற்றைத் தொடங்கினால் அதில் சிறந்து விளங்கலாம். அந்தத் துறைகளில், எடுத்துக் கொண்ட கல்வியில் மிகப்பெரிய உச்சம் தொடலாம் என்பது நம்பிக்கை.

மகாபிரளய காலத்தில் கும்பத்திலிருந்து அமிர்தம் பரவி உலகம் மீண்டும் உருக்கொண்ட தினம் மாசி மகம். வருணதேவன் தன்னைப் பீடித்த பிரம்மஹத்தி தோஷம் நீங்க சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்ற தினம் மாசி மகம். அம்பிகை ஒரு சங்காக அவதரித்து தாட்சாயணியாக மாறியதும் மாசி மகத்தில்தான். முருகனுக்குரிய வழிபாட்டு தினங்களில் மாசி மகம் மிகவும் முக்கியமானது. இந்த நாளில் தவறாமல் சிவாலயம் சென்று வழிபடுவதன் மூலம் இன்னல்கள் நீங்கப்பெறலாம் என்பது நம்பிக்கை.

பௌர்ணமி வழிபாடு அம்பிகைக்கு உரியது. மாசி மாதப் பௌர்ணமி தினம் சிவ வழிபாட்டுக்கும் முன்னோர் வழிபாட்டுக்கும் உரியது. அண்ணாமலையாரே வள்ளாலன் என்ற தன் பக்தனுக்கு திதி கொடுத்து வழிபாடு செய்தது மாசி மாதப் பௌர்ணமி தினத்தில்தான். எனவேதான் வழக்கமாக அமாவாசைகளில் செய்யும் சிரார்த்த காரியங்களை இன்று செய்வது விசேஷம் என்று சொல்லப்படுகிறது.

இந்த நாளில்தான் ஹோலிப் பண்டிகை வருகிறது. கிருஷ்ணன், ராதையுடன் வண்ணப்பொடிகள் தூவி விளையாடிய தினம் இது என்பதால் இந்தப் பண்டிகை மிகவும் முக்கியமானதாகக் கொண்டாடப் படுகிறது. இந்த நாளில் தவறாது இறைவழிபாடு செய்து நன்மைகளைப் பெறலாம்.



# அப்பூதி அடியவரின் வியப்பூட்டும் பக்தி!

**சோ**ழநாட்டு பிரதேசத்தில் திங்களூர் கிராமத்தில், வேதியர் குலத்தில் பிறந்தவர்தான் அப்பூதி அடிகளார். மிகுந்த சிவபக்தி கொண்டவர். அடியவருக்கு அடியவர். ஆகையால் நாவுக்கரசர் மீது பெரும்பக்தி கொண்டிருந்தார். அதனால், திரும்பிய பக்கம் எல்லாம் திருநாவுக்கரசர் அன்ன சத்திரம், திருநாவுக்கரசர் நீர் மோர், திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல், நாவுக்கரசரின் குளக்கரை, நாவுக்கரசரின் அடியார்கள் ஒய்வறை என்று திங்களூர் முழுவதும் ஏற்பாடு செய்து, தனது சொந்த செலவில் மக்களுக்குத் தொண்டு புரிந்து வந்தார்.

ஒரு முறை திருப்பழனத்தில் உள்ள சிவத்தலத்திற்குச் செல்வதற்காகத் திங்களூர் வந்த நாவுக்கரசர், தனது பெயரில் பல சத்திரங்களும், சாவடிகளும் இயங்குவதை கண்டு வியப்புற்றார். நாவுக்கரசர் அப்பூதியாரை காண அவர் வீட்டிற்குச் சென்றார். அப்பூதியார் நாவுகரசரை அதுவரை சந்தித்ததில்லை; ஆகையால் வந்திருப்பவர் ஒரு சிவனடியார் என நினைத்து, அவரை வரவேற்று உபசரித்தார்.

நாவுக்கரசர் அப்பூதியாரிடம், “இத்தனை அன்னதான சத்திரங்களும் சாவடிகளுக்கும் நாவுகரசரின் பெயரை வைத்துள்ளீரே? ஏன் உங்க பெயரிலேயே தொண்டு புரிந்து வரலாமே...?” என்றார்.

அப்பூதிஅடிகளும் சுவாமிகளை நோக்கி, “அடியவரே! திருநாவுக்கரசரின் பெருமை அளவற்றது. உழவாரப்

பணிக்காக தன் வாழ்நாளை அர்பணித்தவர். சிறந்த சிவ தொண்டர். அவர் தொண்டில் ஒரு தூசு அளவு கூட எனது தொண்டானது இல்லை. இதில் அவர் பெயரை வைப்பது தான் சிறந்தது. நீங்களும் சிவ தொண்டர் தானே! நீங்களே அவரைப்பற்றி இப்படி கேட்கலாமா? உண்மையில் நீங்கள் சிவ தொண்டர் தானா?" என்று கேட்டதும்,

"அப்பூதியாரே... நீங்கள் சொன்ன நாவுக்கரசு சிவதொண்டன் அடியேன் தான்" என்று நாவுக்கரசர் சொன்னதும், அப்பூதியடிகளார் சற்றும் தாமதிக்காமல் அவரது கால்களில் விழுந்து வணங்கினார். கண்களில் நீர் சுரந்தது.

"சுவாமிகளே என் வீடு தேடி வந்தது, நான் செய்த புண்ணியம். நீங்கள் அடியேனது இல்லத்தில் உணவு அருந்திவிட்டு இளைப்பாரிய பின் தான் செல்லவேண்டும்" என்ற அப்பூதியாரின் உத்திரவை ஏற்ற திருநாவுக்கரசர்,

"சரி... உன் விருப்பப்படியே நடக்கட்டும். நான் என் அப்பனை தரிசனம் செய்து விட்டு வருகிறேன்" என்று கூறிய திருநாவுக்கரசர், சிவதரிசனத்திற்காக ஆலயம் சென்றார்.

அப்பூதியடியவரின் மனைவி திருநாவுகரசருக்காக அறுசுவை உணவு தயார் செய்தார். உணவும் தயாராகி விட்டது. அப்பூதியடியவர் தனது மூத்த மகனை அழைத்து, "திருநாவுக்கரசர் அமுது உண்பதற்கு வாழை இலை பறித்து வா" என்று கூறினார். அப்பிள்ளையும் வாழை இலைப்பறிப்பதற்காக சென்ற சமயம், மரத்தின் அடியில் இருந்த அரவம் (பாம்பு) ஒன்று அவனை கடித்ததும் அப்பிள்ளை உயிரிழந்தான்.

அச்சமயத்தில் திருநாவுக்கரசர், அப்பூதியடியவரின் இல்லத்திற்கு அமுதுண்ண வரவும், அப்பூதியடியவரும் அவரது மனைவியும், தனது பிள்ளை அரவம் தீண்டி இறந்த செய்தியைத் திருநாவுகரசருக்குத் தெரியாமல் இருக்கவேண்டும் என எண்ணினர். ஆகவே, இறந்த தனது மகனை ஒரு வாழை இலைக்கொண்டு மூடி மறைத்து வைத்தனர். எவ்வித முகசோணலும், வருத்தத்தையும் வெளியில் காட்டாது, அப்பூதியடியவரும் அவரது மனைவியும் நாவுகரசருக்கு அன்னம் படைத்தனர்.

ஆனால், நாவுகரசரோ, "அப்பூதியாரே... உனது மூத்த பிள்ளை எங்கே? அவருடன் நான் சேர்ந்து உணவு அருந்த நினைக்கிறேன்" என்று கூறவும், இனியும் அடியவரிடம் எதையும் மறைக்கமுடியாது என்று நினைத்த அப்பூதியார், நடந்த அனைத்தையும் அவரிடம் கூறினார்.

உடனே திருநாவுக்கரசர் இறந்த அவரது பிள்ளையின் சடலத்துடன் சிவதலம் சென்று, உயிரற்ற பிள்ளையை சிவனின் முன்பாக இட்டு, சிவபெருமான் மேல் பதிகம் ஒன்றை பாடி, சிறுவன் உயிர்தெழ வேண்டினார். சிவபெருமானும் திருநாவுகரசரின் வேண்டுகோளை ஏற்று, சிறுவனுக்கு மீண்டும் உயிர் அளித்தார். தூக்கத்திலிருந்து எழுவதைப்போன்று சிறுவன் எழுந்து வந்ததைக்கண்டு அப்பூதியடியவரும், அவரது மனைவியும் மகிழ்சிஅடைந்தனர்.

பின் அனைவரும் இல்லம் திரும்பி அடியவருக்கு அமுது படைத்து மகிழ்ந்தனர். தன் வாழ்நாள் முழுவதும் திருநாவுகரசரின் திருவடியை மட்டுமே நினைத்து, அதனை வழிபட்டு வாழ்ந்து வந்த அப்பூதி அடிகளார் இறுதியில் சிவபதம் அடைந்தார்.

# கல்லான அகலிகை

**தா**டகை வதம் முடிந்து விஸ்வாமித்திரர் ராம லக்ஷ்மணர்களை தனது யாகசாலையை இருக்கும் இடமான சித்தாஸ்ரமம் அழைத்துச் செல்கிறார். அந்த இடத்தை அடைந்த ராமர், விஸ்வாமித்திரரை தனது யாகத்தை நிறுத்தாமல் தொடர வேண்டுகிறார்.

ஆனால், அரக்கர்களால் யாகத்திற்கு இடையூறு இருப்பதை விஸ்வாமித்திரர் தெரிவித்ததும், அரக்கர்களால் யாககுண்டத்திற்கு எதுவும் இடையூறு ஏற்படாமல் இருக்க யாக சாலை மீது அம்புகளால் ஆன கூடாரத்தை அமைத்து, ராமர், லட்சுமணரும் அந்த இடத்தை கண்ணை இமைக்காத்தது போலக் காத்தனர். அச்சமயத்தில் அசுரர்களான சுபாகு, மாரீசன் இருவரும் யாகத்திற்கு இடையூறு விளைவிக்க முயல்கின்ற சமயத்தில், ராமர் மாரீச்சனைத்தவிர எல்லோரையும் கொன்று விடுகிறார். ராமனுக்கு பயந்த மாரீசன் கடலின் அடியில் ஒளிந்து கொள்கிறான்.

பிறகு விஸ்வாமித்திரர் ராமர் லட்சுமணரின் உதவியால், தனது யாகத்தை முடித்துக்கொண்டு, சித்தாஸ்ரமத்திலிருந்து கிளம்பி மிதிலை புறப்பட்டார். அவர்களுடன் ராமரும் லட்சுமணரும் புறப்பட்டு சென்றனர். மிதிலை செல்லும் வழியில் ஆளரவமற்ற பாழடைந்த ஆசிரமம் ஒன்று தென்பட்டது. ”இது யாருக்கு சொந்தமான ஆஸ்ரமம்?” என்று ராமர் அதைப் பற்றிய விவரங்களைக் கேட்க, விஸ்வாமித்திரர் “இது கௌதமர் என்ற முனிவரின் ஆசிரமம். தனது மனைவி அகலிகையுடன் இங்கு வசித்து, தவம் செய்து வந்தார். ஆனால் ஒருமுறை அவருடைய கோபத்தால் இந்த வனம் சபிக்கப்பட்டு இப்படி அலங்கோலம் ஆனது” என்றார். ராமரும் இதைப்பற்றி விளக்கமாக கூறுமாறு கேட்கவே, விஸ்வாமித்திரரும் அவர்களிடம் அகலிகை பெற்ற சாபத்தை கூறுகிறார்.

அகலிகையை மணக்க விரும்பினான் இந்திரன். ஆனால் கௌதம முனிவரின் மனைவியாக மாறினாள் அகலிகை. இருந்தாலும் அகலிகையின் மேல் மோகம் கொண்ட இந்திரன் எப்படியாவது அவளை அடைந்து தீருவதென்று பிடிவாதமாய் இருந்தான். கௌதம முனிவர் அதிகாலையில் எழுந்து, ஆற்றங்கரை சென்று காலைக் கடன்களை முடித்து, தியானம் செய்வது வழக்கம். இதைத் தெரிந்துக்கொண்ட இந்திரன், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அகலிகையை அடைய நினைத்தான்.

ஒருநாள், யாரும் அறியாதவாறு கௌதம முனிவரின் ஆஸ்ரமம் வந்த இந்திரன், பொழுது விடிவதற்கு முன்பாகவே தான் சேவல் போன்று குரலை எழுப்பினான். இதைக்கேட்ட கௌதமர், “அடடே.. பொழுது விடிந்துவிட்டது, நித்திய காரியங்களில் ஈடுபடவேண்டும்.” என நினைத்து, ஆற்றங்கரை நோக்கி புறப்பட்டு சென்றுவிட்டார்.

அச்சமயம் இந்திரன் கௌதமரின் தோற்றத்தைப்பெற்று, அகலிகையுடன் தவறாக நடந்துக் கொண்டான்.

ஆனால் ஆற்றங்கரை சென்ற கௌதமருக்கு, இன்னும் பொழுது புலரவில்லை என்று தெரிந்ததும், மீண்டும் தனது இல்லத்திற்கு திரும்பினார். அச்சமயம் இந்திரன் கௌதமர் வருவதை தெரிந்துக் கொண்டு ஒரு பூனையின் உருவத்தில் தன்னை மாற்றிக்கொண்டு அங்கிருந்து நழுவினான். இருப்பினும், கௌதமருக்கு வந்திருந்தவன் இந்திரன் என்று தெரிந்ததும், அவனுக்கு சாபத்தை அளித்தார்.

அதேபோல் அகலிகைக்கும், கணவன் யார்?, அடுத்த ஆடவர் யார் என்பது கூடவா ஒரு பெண் தெரிந்துக்கொள்ளாமல் இருப்பாள்?, அல்லது தெரிந்திருந்தும் அதைத் தடுக்க முற்படாமல் இருந்ததால் எனக் கோபம் கொண்டு, அகலிகை கல்லாக மாற சாபத்தை அளித்தார்.

இந்நிகழ்சிக்கு பிறகு கௌதமரும் இவ்வனத்தை விட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு இங்கு எவருமில்லையாததால், இவ்வனம் இவ்வாறு அலங்கோலமாக காட்சி அளிக்கிறது என்று கூறினார்.

அச்சமயம், இதை அமைதியாக கேட்டு வந்த ராமரின் காலில் ஒரு கல் இடரவே... அக்கல்லிலிருந்து அகலிகை தோன்றினாள். அவள் ராமரை வணங்கி, “என் கணவர் என்னை சபித்ததும் நான் கல்லாக மாறிவிட்டேன். இருப்பினும் சாபவிமோசனம் பெரும் பொருட்டு அவரை நான் வேண்டவும், ஏகபத்தினியான ராமரின் பாதம் உன்னை தீண்டும் சமயம் நீ தூய்மையானவளாக மாறி என்னை வந்தடைவாய்” என்று சாபவிமோசனமும் தந்தார்.

“இதோ அந்த நாளும் வந்து விட்டது. உங்களின் பாதம் பட்டவுடன் நான் விமோசனம் அடைந்துவிட்டேன். உங்களை காணும் பாக்கியமும், உங்களின் ஆசியும் பெற்றுவிட்டேன்” என்றவள், ராமரை வணங்கி அவரின் ஆசியை பெற்றாள். பிறகு கௌதம முனிவருடன் வாழ்ந்ததாக புராணங்கள் தெரிவிக்கின்றன.



# திருநீலகண்ட நாயனாரை சோதித்த சிவபெருமான்

**நா**யன்மார்கள் ஒவ்வொருவரின் பக்தியும் வெவ்வேறானதாக இருந்தாலும், அனைவரும் சிவபெருமானின் மீது ஒருமித்த பக்தியை கொண்டிருந்தனர். 63 நாயன்மார்களில் நீலகண்ட நாயனாரின் வரலாறு என்ன என்பதைப் பார்க்கலாம். தில்லையில் குயவர் குலத்தில் பிறந்தவர் நீலகண்ட நாயனார். சிவபெருமான் மீதும் அடியவர்கள் மீதும் அரும் பக்தி கொண்டவர். அடியவர்களுக்குத் திருவோடு செய்துக் கொடுத்து, தனது பக்தியை வெளிக்காட்டினார்.

ஒருமுறை நீலகண்டர் தனது மனைவியை தவிர்த்து, வேறு ஒரு பெண்ணை நாடினார். இதையறிந்த அவரது மனைவி, நாயனாரிடம் கோபம் கொண்டு, "இனி நீங்கள் என்னை தீண்டக்கூடாது. அவ்வாறு என்னை தீண்டினால் நான் உயிரை விட்டுவிடுவேன். இது சிவபெருமான் மீது சத்தியம்" என்று கூறினார்.

சிவபெருமான் மீது சத்தியம் செய்ததால் அந்நிமிடத்திலிருந்து கணவன், மனைவி இருவரும் ஒரே வீட்டில் மனதால் ஒருமித்தவர்களாக இருந்தாலும், உடலால் தொடர்பின்றி இருந்தனர். இருப்பினும் இருவரும் சிவதொண்டர்களுக்குத் தொண்டு செய்து வந்தனர். இப்படி ஆண்டுகள் பல ஓடின. நீலகண்டரும், அவரது மனைவியும் முதுமையடைந்தார்கள். முதுமையிலும்கூட நீலகண்டர் சிவபெருமான் மீது அதீத பக்தி கொண்டு சிவ தொண்டர்களுக்குத் திருவோட்டை செய்து கொடுத்து வந்தார்.

நீலகண்டரையும், அவரது மனைவியையும் மீண்டும் வாழ்வினில் இணைத்திட விரும்பிய சிவபெருமான், ஒரு அடியவர் போல் உருவம் கொண்டு நீலகண்டரின் வீட்டை அடைந்தார். வாசலில் அடியவர் ஒருவர் வருவதைக்கண்ட நீலகண்டரும், அவரது மனைவியும் அவரை வரவேற்று உபசரித்தனர். பின் அடியவராய் வேடம் தரித்து வந்த சிவபெருமான், நீலகண்டரிடத்தில் ஒரு திருவோட்டினைக் கொடுத்து, "நீலகண்டா... இது புனிதத் திருவோடு. இதை நான் திரும்பி வந்து கேட்கும் வரையில் இதைப் பத்திரமாக வைத்திருக்கும் பொறுப்பு உன்னுடையது" என்று கூறி நீலகண்டரிடம் திருவோட்டை கொடுத்துவிட்டு சென்றார்.



நாட்கள் பல கடந்தன. நீலகண்டர், அடியவர் தந்து சென்ற திருவோட்டை மறந்து போய் இருந்தார். ஒரு நாள் அதே அடியவர் நீலகண்டரின் வீட்டிற்குச் சென்று, தான் கொடுத்த திருவோட்டைத் திரும்பக் கேட்டார். அப்பொழுது தான் நீலகண்டருக்கு அத்திருவோட்டின் நினைவு வந்தது. அதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்த இடத்தில் சென்று பார்க்கும் சமயம், அத்திருவோடானது காணாமல் போய் இருந்தது.

மனம் பதைத்த நீலகண்டர் அடியவரிடம் சென்று வணங்கி, "அடியவரே என்னை மன்னிக்க வேண்டும். நாட்கள் ஆனதால் உங்கள் திருவோட்டினை காக்கத் தவறி விட்டேன். ஆகையால் அது காணாமல் போய்விட்டது" என்றார்.

அதைக்கேட்ட அடியவர் மிகவும் கோபம் கொண்டு, "எனது திருவோட்டினை இப்பொழுதே தரவேண்டும். இல்லையென்றால் நடப்பதே வேறு" என்று கூறிவிட்டார். இதைக்கேட்டு நடுநடுங்கிய நீலகண்டர், பழைய திருவோட்டிற்குப் பதிலாகப் புதிதாக வேறு திருவோடு செய்து தருவதாகக் கூறினார். ஆனால், அடியவரோ பெருமைமிக்கத் தனது திருவோடு தான் வேண்டும் என்று கூறவும், என்ன செய்வது என்று தெரியாமல் நீல கண்டரும், அவரது மனைவியும் நடுங்கினர்.

மேலும் அடியவர் "எனது புனிதமான திருவோட்டை நீங்கள் இருவரும் திருடி விற்றிருப்பீர்கள். அதனால் தான் உங்களிடம் அத்திருவோடானது இல்லை" என்றார். அதைக்கேட்ட நீலகண்டர், "ஐயா என் மேல் ஆணையாக அதை நாங்கள் திருடவில்லை" என்றார்.

உடனே அடியவர், "அப்படியேன்றால் நீங்கள் இருவரும் ஒன்றாகக் குளத்தில் மூழ்கி சத்தியம் செய்யுங்கள். அப்பொழுது நான் நம்புகிறேன்" என்று கூறினார். அடியவரின் சத்தத்தால், அதற்குள் மக்கள் அங்கு கூடி விட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் அடியவர் சொல்வது போல் செய்யுமாறு நீலகண்டரையும், அவரது மனைவியையும் வற்புறுத்தவும், வேறு வழியில்லாமல் தனக்கும், தனது மனைவிக்குமான ஊடலை அங்கிருந்தவரிடம் தெரிவித்தார் நீலகண்டர்.

ஆனாலும் அடியவரும், அங்கிருந்தவரும் நீலகண்டரை வற்புறுத்தனர். இதனால் ஒரு நீளமான மூங்கிலின் ஒருபுறத்தை நீலகண்டரும், மறுபுறத்தை அவர் மனைவியும் பிடித்தபடி தண்ணீரில் மூழ்கி சத்தியம் செய்தனர். ஆனால், அதை சிவனடியவர் ஒத்துக்கொள்ளவில்லை. மாறாக கணவன், மனைவி இருவரும் ஒன்றாகக் கைகோர்த்தபடி மூழ்கி எழ வேண்டும் என்றார்.

வேறு வழியில்லாமல் நீலகண்டரும் அவர் மனைவியும் ஒன்றாகக் குளத்தில் மூழ்கி எழுந்தனர். அச்சமயம், அவர்கள் இருவரின் முதுமையும் நீங்கி இளமையாக மாறினர். அங்குக் கூடியிருந்த அனைவருக்கும் மிகவும் ஆச்சர்யமாகப் போனது. சிவனடியவராக வந்த சிவபெருமான், இருவரையும் 'இவ்வாலிபத் தோற்றத்துடன் எப்பவும் என்னுடன் இருங்கள்' எனக்கூறி சிவலோகம் கூட்டிச்சென்றார் என்கின்றன புராணங்கள்.



# யார் இந்த பிரகலாதன்?

இரண்யகசிபு என்ற அரக்கன், விஷ்ணு பகவானுக்கு ஜென்ம விரோதி. ஒருமுறை அவன் பிரம்மாவிடத்தில் "மனிதனாலோ, மிருகத்தினாலோ, வீட்டின் உள்ளேயோ, வெளிலேயோ எந்த ஒரு ஆயுதத்தாலும் பகல், இரவுகளில் எனக்கு இறப்பு என்பது வரக்கூடாது" என்றொரு வரத்தைப் பெற்றிருந்தான். அதனால் அவனது அட்டகாசமானது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந்தது. எதற்கும் ஒரு முடிவு வேண்டும் அல்லவா? இதற்கும் முடிவு வந்தது. இவனது முடிவை, இவன் குழந்தையின் மூலமே நிறைவேற்ற எண்ணிய பகவான், அவனுக்கு ஒரு ஆண் குழந்தையைத் தந்தார். அக்குழந்தைதான் பிரகலாதன். இக்குழந்தை பிறந்தது முதல் நாராயணன் மேல் அளவு கடந்த பக்தியைக் கொண்டிருந்தான்.

அரக்கர்கள் அனைவரும், "ஓம் இரண்யாயை நமஹ" என்று சொல்லும் வேளையில், பிரகலாதன் மட்டும் "ஓம் நமோ நாராயணா" என்று சொல்லி வந்தது இரண்யகசிபுக்குப் பிடிக்கவில்லை. மகனைக் கண்டித்தும் பார்த்தான், தண்டித்தும் பார்த்தான். பிரகலாதன் மாறுவதைபோல் தெரியவில்லை. தவிரவும், பிரகலாதன் தனது நண்பர்களிடமும் நாராயணன் பற்றி எடுத்துக் கூறி, அவர்களையும் "ஓம் நமோ நாராயணா" என்னும் திருநாமத்தை உச்சரிக்கச் சொல்லி தந்தான்.

இது இரண்யகசிபுக்கு மேலும் கோபத்தை உண்டாக்கியது. தனது மகனால் தனக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதை உணர்ந்த இரண்யகசிபு, சேவகர்களிடம்

பிரகலாதனை கொலை செய்து விடும்படி கட்டளை இட்டான்.

அரசனின் கட்டளையை ஏற்ற சேவகர்களும், பிரகலாதனை மலையிலிருந்து கீழே தள்ளியும், கடலுக்குள் வீசியும், யானையால் தலையைப் பிடறவைத்தும், பல்வேறு வழிகளில் அவனது உயிரைப் பறிக்க முயன்றனர். ஆனால், ஒவ்வொரு ஆபத்தின் போதும் பிரகலாதனை நாராயணன் காப்பாற்றினார். இது இரண்யகசிபுக்கு கடும் கோபத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

ஒருகட்டத்தில் இரண்யகசிபு, பிரகலாதனை அழைத்து, "ஒவ்வொரு முறையும் உன்னை நாராயணன் காப்பாற்றுவதாக கூறுகிறாயே... இப்பொழுது நானே என் கையால் உன் உயிரை எடுக்கப் போகிறேன். இப்பொழுது உன் நாராயணன் இங்கு வந்து உன்னை காப்பானா?" என்றான்.

உடனே பிரகலாதன் "ஆம் தந்தையே! அவசியம் வருவார். அவர் எங்கும் நிறைந்துள்ளவர். ஆகவே கூப்பிட்டதும் வந்து விடுவார்" என்றான்.

"அப்படி என்றால் இத்தூணில் கூட உன் நாராயணன் இருக்கிறாரா? இருந்தால் அவரை வரச் சொல்" என்று சொல்லி முடிக்கும் முன்பாக, தூணைப் பிளந்து கொண்டு நரசிம்மர் அவதரித்தார். சித்திரை மாத வளர்பிறை சுவாதி நட்சத்திர திருநாள்தான் அவர் அவதரித்த வேளை. தூணைப் பிளந்து வெளியே வந்த பகவான், நரசிம்மமூர்த்தியாகக் காட்சி அளித்தார். பின் பகவான் இரண்யகசிபை மடியில் கிடத்தி, வதம் செய்தார் என்று புராணங்கள் சொல்கின்றன.



## நரசிம்மரின் 3 அடையாளங்கள்

இந்த நரசிம்மர் - உக்கிர நரசிம்மர், லெக்ஷ்மி நரசிம்மர், யோக நரசிம்மர் என்று மூன்று விதமாக அடையாளப் படுத்தபடுகிறார்.

உக்கிர நரசிம்மரை வணங்கினால் எதிரிகள், சத்ருக்களின் தொல்லை நீங்கும். வேலை வாய்ப்பு, வேலை உயர்வு போன்றவற்றிற்கு இவரை வணங்கலாம். இந்த நரசிம்மருக்கு ஒரு விஷேஷ குணம் உண்டு. பக்தர்கள் அழைத்ததும், உடனடியாக வரக் கூடியவர்! உடனடியாக பலனும் தரக்கூடியவர்.

செல்வத்திற்கு லெஷ்மி நரசிம்மரை வணங்கலாம்.

ஞானம், அறிவு பெற இயோகநரசிம்மரை வணங்கலாம்.

நரசிம்மருக்கு பானகம் மிகவும் விஷேஷமானது. ஆகையால் பானகத்தை நைவேத்யமாகப் படைக்கலாம்.



# பொன்னாலை வரதராஜப் பெருமாள்

**சென்ற இதழின் தொடர்ச்சி**

புராண காலம் என்று மதிக்கப்படுகின்ற மிகப் பழமையான காலத்தில், இவ்வாறு சிறப்புடன் தோன்றிய ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோவில், சரித்திர காலத்தில் சீரும் சிறப்பும் உடையதாயும், ஸ்ரீமந்நாராயணனின் அருள் பிரவாகிக்கும் மகிமை உடையதாகவும் விளங்கியிருக்கிறது. ஸ்ரீகோணேஷ்வரம் என்னும் திருகோணமலையில் பல திருப்பணிகள் செய்தவனும், கந்தளாய்க் குளம் முதலிய குளங்களை தன் ஆட்சியில் ஏற்படுத்தியதனால் குளக்கோட்டன் என்னும் பெயரால் புகழடைந்தவனுமான அரசன் பொன்னாலை, வரதராஜப் பெருமாளை வணங்கி, அருள் பெற்று பல திருப்பணிகளை செய்திருக்கின்றான். தமிழ்நாட்டிலே முதன்மையான திருமால் தலமாக விளங்கும் ஸ்ரீரங்கத்தில் உள்ளது போல, பொன்னாலையிலும் ஏழு வீதிகள் கோபுரங்கள் அமைக்கும் திருப்பணிகளைக் குளக்கோட்டன் செய்தான். உரிய பல இனமக்களையும் ஆலயச் சூழலில் குடியிருத்தினான். இன்றும் நிலப்பெயர்கள் அப்படி குடியிருந்தவர்களின் பெயரால் வழங்கப்படுகின்றன. இம் மன்னன் அமைத்த ஏழாம் வீதியில்: ஆலயத்திற்குச் செல்பவர் முதலில் வணங்க அமைத்த விநாயகர் ஆலயமே இப்போது வரதராஜப் பெருமான் கோவிலுக்கு சுமார் கால்மைல் முன்பாக



அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயமாகும். இக் குளக்கோட்டு மன்னன் இவ்வாலயத்திற்கு செய்த திருப்பணிகளின் பெருமையில் இருந்தே நாராயணன் மன்னனுக்கு விசேடமாக அருள் புரிந்ததை அறியலாம்.

நம் நாட்டிற்கு அந்நியப் படையெடுப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து உண்டான சமய அழிவில் ஏழு வீதிகளுடன் இருந்த ஆலயம் அழிந்தது. அந்த ஆலயத்தில் எடுத்த கற்களைக் கொண்டே சங்கானைக் கோட்டை, ஊர்காவற்றுறைக் கடற் கோட்டை முதலியன அமைக்கப் பட்டன. சில வருடங்களுக்கு முன் அரசாங்க வேலையை குத்தகைக்கு எடுத்து செய்யும் ஒப்பந்தக்காரர் ஒருவர் ஊர்காவற்றுறைக் கோட்டை கட்டப் பயன் பட்டிருந்த கற்களில் சங்கு சக்கரச் சின்னங்கள் இருப்பதை அவதானித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேய அரசாங்கம் சமய சுதந்திரம் வழங்கியவுடன் தோன்றிய ஆலயங்களுள் ஒன்றாக பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலும் இடம் பெறுகின்றது. யாழ்ப்பாணச் சமய நிலை என ஆறுமுக நாவலர் எழுதிய நூலில் சிறப்பாகத் திருவிழா நடைபெற்று அதிக மக்கள் கூடும் ஆலயங்களின் வரிசையில் இவ்வாலயமும் இடம் பெறுகிறது.

ஸ்ரீவரதராஜப் பெருமாளிடம் கொண்ட பெரும் ஈடுபாடு காரணமாக மிகப் பெரிய அளவில் ஆலயம் அமைக்க விரும்பிய அன்பர்கள் பெரிய திட்டத்தில் மூலஸ்தானத்தை அமைத்து அதற்கேற்ப பிறமண்டபங்களை அமைத்து வருகின்றனர். மிகப் பெரிய அளவில் ஆரம்பித்தபடியால் உட்பிரகார வேலைகள் இன்னும் முற்றுப்பெறாத நிலையில் உள்ளன.

இவ்வாலயத்தில் உள்ள நாகதம்பிரான், மகாலக்குமி சனீஸ்வரன் நவக்கிரகங்கள் ஆகிய மூர்த்திகளும் இவ்வாலயத்துடன் தொடர்புடைய ஆலயங்களாக விழங்கும் விநாயகராலய வைரவராலய மூர்த்திகளும் அருட்சிறப்பு மிக்கனவாக விளங்குவதும் இவ்வாலய மகிமைக்கு அடையாளங்களாக உள்ளன.

இவ்வாலயத்தில் மகாலக்குமி அம்பாளும் நாராயணனை பூசித்து அருள் பெற்றுள்ளார் என்று ஒரு கருத்து திருக்கேதீச்சர புராணத்தில் விசேடமாக சொல்லப் பட்டிருக்கின்றது. இந்திரனின் பொன்மயமான விமானம் பலருக்கும் தெரிந்த காரணத்தாலும், பொன் என்னும் பெயருடைய இலக்குமி பூசித்த காரணத்தாலுமே இவ்வாலயத்துக்கு பொன்னாலையம் என்னும் பெயர் ஏற்பட்டது.

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலில் சமீபத்தில் பூமிலக்குமி அமைக்கப்பட்டது. இப் பூமிலக்குமி கோவில் கும்பாபிழிகத்தினத்திலிருந்து இவ்வாலய வெளி வீதியை நூற்றெட்டு முறை வலம் வந்து அருள் பெற்றவர் அநேகர் இன்றும் பலர் சிரத்தையுடன் இவ் வழிபாட்டை மேற்கொள்கின்றனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு தம்பதியர் ஒரே தினத்தில் நூற்றெட்டு முறை வலம்வர எண்ணி வலம் வந்தனர். இவர்கள் நூற்றெட்டாவது முறை வலம் வந்த போது கருடன் தன் இறக்கைக் காற்று அவர்கள் மீது படும் படியாகத் தாழ்ந்து பறந்து ஆசீர்வதித்தது. இவ்வாலயத்தில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும் போது ஆலயத்துக்கு மேல் கருடன் பறப்பதும் இயல்பாகும்.

**முற்றும்**

# சாய்ந்த சிவபெருமான் நிமிர்ந்தது எப்படி?

திருக்கடவூர் என்னும் ஊரில் கலயனார் என்று ஒருவர் இருந்தார். இவர் சிறந்த சிவ பக்தர். தினமும் சிவபெருமானின் மீது கொண்ட பக்தியால் குங்கிலியம் என்ற வாசனை பொருளைக் கொண்டு, சிவனுக்குத் தூபமிட்டு தொண்டாற்றி வந்ததால், அங்கிருந்த மக்கள் இவரை குங்கிலிய கலயனார் என்று அழைத்து வந்தனர். இவரின் பக்தியை உலகறிய செய்திட வேண்டும் என்று சிவபெருமான் எண்ணினார். அதனால் தனது திருவிளையாடலை ஆரம்பித்தார்.

தினமும் அவர் குங்கிலியம் வாங்குவது, சிவபெருமானுக்குத் தூபமிடுவது என்றிருந்த இவரின் செல்வமானது, சிறிது சிறிதாகக் கரையத் தொடங்கியது. இருப்பினும் தனது பொன், பொருளை விற்று குங்கிலியத் தூபமிடும் வேலையை இவர் நிறுத்தாமல் செய்து வந்தார். கடைசியாக இவரின் மொத்த செல்வமும் அழிந்து, அடுத்த வேளை குங்கிலியத் தூப ஆராதனைக்குக் கையில் பணமில்லை. கவலையுடன் வீட்டிற்கு வந்தவருக்கு, கலையனாரின் மனைவி, அவரிடத்தில் தனது மாங்கல்யத்தை தந்து, "இதை விற்றுப் பணமாக்கிக் கொண்டு வாருங்கள், அப்பொழுதுதான் நான் குழந்தைகளுக்கு அமுது படைக்க முடியும், வீட்டில் ஒரு பிடி நெல் கூட இல்லை" என்றாள்.

"சரி" என கலயனாரும் சிறிது மன சங்கடத்துடன் நகையை விற்று, பணமாகக் கொண்டு வரும் வழியில் குங்கிலியம் விற்பவர் எதிரே வந்தார். பின்னர் சிவனுக்குக் குங்கியலிம் வாங்கிக் கொண்டு, சிவபெருமான் சன்னதிக்குச் சென்று குங்கிலியத் தூபமிட்டு, அவரைத் தரிசனம் செய்வதில் நேரத்தைச் செலவழித்ததால், அவருக்குத் தனது குடும்பத்தைப் பற்றி நினைவு வரவில்லை. கலயனாரின் மனைவியும், குழந்தைகளும் கலயனாரின் வரவை எதிர்ப்பார்த்தபடியே பசியுடன் உறங்கி விட்டனர். இவர்களின் இந்நிலையைக் கண்ட சிவபெருமான், தனது அருளால் கலயனாரின் வறுமையை



போக்கும் பொருட்டு பொன்னாலும், பொருளாலும் வீட்டை நிரப்பச் செய்தார். பிறகு அவரது மனைவியாரின் கனவில் தோன்றிய சிவபெருமான், "என் அடியவரைச் சோதனை செய்வேன். ஆனால் கைவிடமாட்டேன். இனி உங்கள் வறுமை நீங்கி, என்றும் மகிழ்சியாக இருப்பீர்களாக...." என்று அருளாசி வழங்கினார்.

இக்கனவை கண்டதும் திடுக்கிட்டு முழித்த கலயனாரின் வீடு முழுவதும் நிரம்ப செல்வங்களும், பொருட்களும் இருப்பதைக்கண்ட அவரது மனைவி, இச்செய்தியைத் தனது கணவருக்குத்



தெரிவிக்கும் பொருட்டு அவரை தேடிச்சென்று விஷயத்தைக் கூறினாள். கலயனாரும், அவரது மனைவியும் அச்செல்வத்தைக்கொண்டு மறுபடியும் குங்கிலியத்தூபத் தொண்டினையும், சிவனடியவருக்கு அமுதூட்டும் தொண்டினையும் செய்து மன மகிழ்ச்சியுடன் செய்து வந்தனர்.

காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்பார்கள். நம்மைச்சுற்றி நடக்கும் நல்லது, கெட்டது என்ற அனைத்து காரணங்களுக்குப் பின்பும் ஒரு காரியமானது கண்டிப்பாக இருக்கும். அதே போல் தான் தாடகையினால் சற்று தலையைக் கவிழ்ந்துக் கொண்ட சிவபெருமான் யாருக்காக நிமிர்ந்தார்? தாடகை இவள் ஓர் அசுரனின் மகள். ஆனால் தீவிர ஒரு சிவபக்தை. தினந்தோறும் சிவபெருமானுக்கு மாலை சூட்டி அழகுபார்ப்பது இவளின் செயல். அப்படி ஒருநாள் அவள் சிவபெருமானுக்கு மாலை அணிவிக்கும் பொழுது, அவளது மேலாடை நழுவியது.

ஒருகையில் மேலாடையைப் பிடித்தபடி மறுகையில் மாலையை பிடித்தபடி வெட்கம் தாளாது, அவள் நாணமுற, அவள் வெட்கத்தையும், துயரத்தையும் கண்ட சிவபெருமான் தனது திருமேனியைச் சற்றே சாய்த்துக் கொண்டு, அவள் அளித்த மாலையை வாங்கிக் கொண்டதினால்தான் சிவலிங்கமானது சாய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

ஒரு சமயம் திருப்பனந்தாள் என்னும் ஊரில் இருந்த சிவ ஆலயத்தின் சிவலிங்கமானது திடீரென சாய்ந்தது. அதனை நிமிர்த்த முயன்று பலரும் தோல்வியுற்றனர். அவ்வூரின் மன்னன், தனது பலத்தாலும், யானையைக் கொண்டு அதன் பலத்தாலும் அச் சிவலிங்கத்தை எழுப்ப முயன்றார். ஆனாலும், அதில் அவரால் வெற்றி பெற முடியவில்லை. இச்சமயத்தில் மந்திரி ஒருவன் கலையநாரின் சிவபக்தியையும், சிவபெருமானின் அருளால் அவன் பெற்ற செல்வ செழிப்பை பற்றியும் எடுத்துக்கூறி, இவர் நினைத்தால் சிவபெருமானை நிமிர்த்தி வைக்க இயலும் என்று கூறவும், கலயநாரை அழைத்து வர மன்னர் ஏற்பாடு செய்தான்.

மன்னனின் வருத்தத்தை கேள்விபட்ட கலயனார், திருப்பனந்தாள் சென்று சிவலிங்கத்தின் மீது ஒரு கயிற்றையும், மறு முனையைத் தனது கழுத்திலும் கட்டிக்கொண்டு சிவலிங்கத்தை இழுத்தார். என்ன அதிசயம்?... மறுகணமே சிவலிங்கம் நிமிர்ந்தது. மகிழ்சியடைந்த மன்னர் கலயனாரை வணங்கி, அவரின் பெருமையை ஊரறிய செய்தார். அதிலிருந்து அவர் குங்கிலிய நாயனாராக அறியப்படுகிறார். குங்கிலிய நாயனாரைத்தேடி திருக்கடவூருக்கு திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் வந்திருந்து, அவரை வணங்கிச்சென்றனர். இறுதியில் சிவதொண்டை விடாது செய்து வந்த குங்கலியநாயனார் சிவபதம் அடைந்தார்.



20 ETR ஆம் ஆண்டில்
24/7
ஜெர்மனியின் முதல் 24மணி நேர தமிழ் வானொலி
நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற அழையுங்கள்
004923118970200
Radio - by - Phone
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
அழையுங்கள்! வானொலியைத் கேட்டு மகிழுங்கள்..!!
00 4934 5483411998
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm
மகிழ்வுடன்.... அகரம்
அகர தீபம்
ETR NEWS
ETR Music